**தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவை - 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களின் தொகுப்பாக மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் நிலவிய ரூபா 3,131,511 கிரயமான மற்றும் ரூபா 240,178 திரண்ட பெறுமானத்தேய்வைக் கொண்ட நிலையான சொத்துக்கள் தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2008 ஆம் ஆண்டின் போது முதலீடு செய்யப்பட்ட ரூபா 5,000,000 தொகையான நிலையான வைப்புகளுக்காக வைப்புச் சான்றிதழ்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் ரூபா 806,849 தொகையான வைப்பு வட்டி வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்தப்படுவதற்கு உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

---

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் இணக்கப்பாடும் உரிய அமைச்சரின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்படாது பேரவையால் 2007 ஆம் மற்றும் 2008 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 9,992,823 தொகையும் ரூபா 5,000,000 தொகையும் திறைசேரி உண்டியல்களிலும் நிலையான வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்<br>நிதிப் பிரமாணம் 395 | ஒவ்வொரு மாத இறுதியிலும் உள்ள கொடுக்கல்வாங்கல்களின் நிலை தொடர்பாக அடுத்தவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 2,034,970 கிரயமான கணனிகளுக்காக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 1978 திசெம்பர் 10 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 1,096,540 கிரயமான நிலையான சொத்துக்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான ஒழுங்குபடுத்தல் பேரவையின் நிதி விளைவு ரூபா 970,888 தொகையான மிகையாகக் காணப்பட்டதுடன் இதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் போதான மிகை ரூபா 1,437,715 தொகையானமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவில் ரூபா 466,827 தொகையான வீழ்ச்சி காண்பிக்கப்பட்டது. தனியார் மருத்துவ நிறுவகங்களை பதிவு செய்தல் வருமானம் ரூபா 1,761,000 தொகையால் குறைவடைந்தமை மேற்குறித்த வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வுகளைக் கருத்திற்கொள்கையில் 2007, 2008, 2009 ஆம் மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது பேரவையின் பங்களிப்பு முறையே ரூபா 11,168,903 தொகையும், ரூபா 6,711,807 தொகையும், ரூபா 2,871,214 தொகையும், ரூபா 2,530,453 தொகையுமானமையால் 2007 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் பேரவையின் பங்களிப்பு தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தனியார் மருத்துவ நிறுவகங்கள் (பதிவு செய்தல்) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவ நிறுவகங்களால் பேணப்பட வேண்டிய தரங்களை விருத்தி செய்து கண்காணித்தல், தற்போது பேணப்பட்டு வரும் தரங்களை மதிப்பிடும் முறை ஒன்றை செயற்படுத்தல் மற்றும் வழங்கப்படும் அல்லது விநியோகிக்கப்படும் நோயாளிகளைப் பேணும் சேவைகளின் தரத்தை உறுதிப்படுத்தல், சகல தனியார் மருத்துவ நிலையங்களாலும் பதவியணியைச் சேர்க்கும் போது ஆகக் குறைந்த தகைமைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்தி பதவியணியை பயிற்றுவிக்கையில் ஆகக் குறைந்த தரங்கள் பேணப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல் போன்ற பேரவையின் நோக்கங்கள் எய்தப்படுவதற்காக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபை நோக்கங்களை எய்துவதற்காக தனியார் மருத்துவ நிறுவகங்களிற்காக மதிப்பீடு செய்யும் தீர்மான முறை ஒன்று முறைப்படி செயற்படுத்தப்படுவதற்கு, தனியார் மருத்துவ நிறுவகங்கள் பதிவு செய்யப்படுகையிலும் அப் பதிவுகள் புதுப்பிக்கப்படுகையிலும் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்களால் இணக்கமாகச் செயற்பட வேண்டிய ஒழுக்காற்றல் வழிமுறைகள் தயாரிக்கப்படுவதற்கும் தொடர்பைக் காண்பிக்கும் அல்லது அதிருப்திக்கு உட்பட்ட நபர் ஒருவரால் ஏதேனும் ஓர் தனியார் வைத்திய நிறுவகம் ஒன்றிற்கு அல்லது அதனுடன் தொடர்புபட்ட நபர் ஒருவருக்கு எதிராக

மேற்கொள்ளப்படும் ஏதேனும் முறைப்பாடு ஒன்றைப் பொறுப்பேற்கையிலும் அம் முறைப்பாட்டை இறுதியாக நீக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் அல்லது படிமுறைகள் தொடர்பாக கட்டளைகள் தயாரிக்கப்படுவதற்கு எவ்வித நடைமுறையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது 419 தனியார் மருத்துவ நிறுவகங்கள் மாத்திரம் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை 602 உடன் ஒப்பிடுகையில் அவ் எண்ணிக்கை 30 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. பதிவு செய்யப்பட வேண்டிய தனியார் மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கையை இனங்காண்பதற்கு, பதிவு செய்யப்படுவதற்கு மற்றும் பதிவு செய்யப்படாத நிறுவகங்கள் தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்படுவதற்கு பேரவையால் முறையான நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒழுங்குபடுத்தல் பேரவையால் மீளாய்வாண்டிற்காக செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிராமையால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றத்தைப் பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆம் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நான்கு வருட காலதாமதத்தின் பின்னர் 2016 சனவரி 04 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் நோக்கையும் செயற்பணியையும் அடைந்துகொள்வதற்காக 03 ஆண்டுகளுக்கு குறையாத ஓர் காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் ஒழுங்குபடுத்தல் பேரவையால் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 உள்ளகக் கணக்காய்வு

---------------------------------------

மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.5 கொள்வனவுத் திட்டம்

------------------------------------

மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------------

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவின் பிரகாரம், பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.